**<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>**

**<u>நகர்மன்றக்கூட்டம்</u>**

**<u>நாள். .01.2021 கிழமை நேரம் : காலை 10.00 மணி</u>**

---

## <u>நகர்மன்றக்கூட்டம் : நாள். .01.2021</u>

**<u>மன்றப்பொருள்:-1</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் பொருட்டு 41 தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை கொண்டு M/s. சீலைக்காரி அம்மன் மகளிர் சுய உதவிக்குழு மூலம் டிசம்பர் 2020 வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மழைக்காலம் தொடங்கி தொடர்ந்து மழை பெய்து வருவதால் டெங்கு கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் பணியை பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணிகள் மேற்கொண்டு வரும் M/s. சீலைக்காரி அம்மன் மகளிர் சுய உதவிக்குழு 41 தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும் (ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை) அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 3,00,000/– (ஒரு மாதத்திற்கு) மன்றத்தின் அனுமக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்.1)

---

**<u>மன்றப்பொருள்: 2</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முடிதிருத்தகம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 249– இன்படி தொழில் உரிமம் நகராட்சியில் பெற்றுக்கொள்ளக்கோரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு M/s. ESS ESS publication, மதுரை நிறுவனத்திடமிருந்து ரூ. 14,700/–க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ. 14700/– M/s. ESS ESS Publication மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2240/2020/எச்.1)

---

<u>**உசிலம்பட்டி நகராட்சி**</u>

<u>**நகர்மன்ற தீர்மான எண். 3, நாள். 11.01.2021–இன் உண்மை நகல்**</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19775/ஜே2/2019–3, நாள். 15.12–2020–இன்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர்கள் 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராடசி சட்டம் (ஐந்தாவது திருத்தம்) (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V–இல் உள்ள உட்பிரிவு (jj) மற்றும் (jjj) –இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24–இன்படி தொழில் உரிமம் பெற தொழில் உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்ய கீழ்க்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | தொழில் விபரம் | தொழில் உரிம கட்டணம் விபரம் |
|---|---|---|
| 1 | முடித்திருத்தகம் | ரூ.200/– ஆண்டிற்கு |
| 2 | அழகு நிலையம் | ரூ. 2000/– ஆண்டிற்கு |
| 3 | ஸ்பா | ரூ. 3000/– ஆண்டிற்கு |
| 4 | மசாஜ் நிலையம் | ரூ. 5000/– ஆண்டிற்கு |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொழில்உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2240/2020/எச்.1)

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) ப.பாலமுருகன்
ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர் ,
உசிலம்பட்டி நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்(பொ),
உசிலம்பட்டி நகராட்சி.

**<u>மன்றப்பொருள்: 4</u>**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் பொதுமக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை, டெங்கு மற்றும் கொரோனா பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் அச்சடிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு

1). M/s. Arumbakkam Stationaires and Printing
Service industrial Co-operative society Ltd., Chennai – ரூ. 15.50 / 1 எண்ணம்

2). M/s. SSI Indco serve industrial Co-operative
society Ltd., Kovilpatti – ரூ. 15.00 / 1 எண்ணம்

3). M/s.The Thoothukudi district HI-TECH Printing and
Allied service industrial co-operative society Ltd, Kovilpatti – ரூ. 16.00 / 1 எண்ணம்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. SSI Indco serve industrial Co-operative society Ltd., Kovilpatti நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 13440/2019/எச்.1)

---

**உசிலம்பட்டி நகராட்சி**

**நகர்மன்ற தீர்மான எண். 5, நாள். 19.01.2021–இன் உண்மை நகல்**

**மன்றப்பொருள்: 5**

உசிலம்பட்டி நகராட்சியில் தினசரி 10 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 5 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர சுமார் 0.52 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) சுமார் 4 மெட்ரிக் அளவுள்ள டன் உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s. Ultratech / M/s. Dalmia, சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாங்க மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.5000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள ( Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள திருமங்கலம் நகராட்சிகயில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 15 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கவும் மேற்படி திட்டத்தினை திருமங்கலம் நகராட்சியில் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மொத்த மதிப்பீடு **ரூ.187.00** இலட்சத்தில் உசிலம்பட்டி நகராட்சியின் பங்குதொகை ரூ,61.71 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சியில் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | திருமங்கலம் | 187.00 | 125.29 |
| 2 | உசிலம்பட்டி | | 61.71 |
| | **மொத்தம்** | | **187.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை திருமங்கலம் நகராட்சியின் மூலம் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிரிந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் திருமங்கலம் நகராட்சியின் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிரிந்து கொள்ளவும், தொடர் பராமரிப்பினை திருமங்கலம் நகராட்சி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் : 5** **நாள். 19.01.2021**

**அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

(ஒம்) ப.பாலமுருகன்
ஆணையாளர்(பொ) மற்றும் தனி அலுவலர் ,
உசிலம்பட்டி நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்(பொ),
உசிலம்பட்டி நகராட்சி.

**மன்றப்பொருள்: 6**

உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொரோனா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கிருமிநாசினி பொருட்கள் இருப்பு குறைவாக உள்ளதால் பிளிச்சிங் பவுடர் 5 டன், பினாயில் 200 லிட்டர் மற்றும் லைசால் 500 லிட்டர் கொள்முதல் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 4,60,000/—க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 77/2021/எச்.1)

---

**மன்றப்பொருள்: 7**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2020—2021—ஆம் ஆண்டுக்கு கீழ்காணும் விபரப்படி எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் தேவைப்படுகிறது.

| வ.எண். | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சம்பள பதிவேடு | 2 |
| 2 | கட்டிட அனுமதி உரிமம் வழங்கும் பதிவேடு | 2 |
| 3 | கட்டிட மனுக்கள் வருகை பதிவேடு | 2 |
| 4 | தீர்மான புத்தகம் | 2 |
| 5 | வருவாய் நிதி பதிவேடு | 4 |
| 6 | உள்பணியாளர், வெளிப்பணியாளர் பதிவேடு | 2 |
| 7 | தன்பதிவேடு | 10 |
| 8 | பணியாளர் வருகை பதிவேடு | 6 |

மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் அவசர அவசியம் கருதி கொள்முதல் பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
உசிலம்பட்டி நகராட்சி.